சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 04.01.2023 SC.18/2018

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

அ.சா.3

**முதல் விசாரணை**

நான் அனுமந்தன்பட்டியில் கோபால் பஜனை கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கடையில் இருந்தபோது போலிசார் என்னை எங்கள் ஊரில் சதீஸ்குமாருக்கும் மாரிமுத்துக்கும் சண்டை நடந்ததை விசாரிக்க வந்தார்கள். நான் சண்டை நடந்தபோது ஊரில் இல்லை. மதுரைக்கு சென்றுவிட்டேன். நான் ஊருக்கு வந்தபோது என்னுடைய அம்மா சொல்லி தான் எனக்கு அவர்களுக்குள் நடந்த சண்டை பற்றி தெரியவந்தது. எங்களுடைய கடையின் அருகில் வரும்போது மாரிமுத்துவும் சதீஸ்குமாரும் சண்டை போட்டுக்கொண்டதாக என்னுடைய அம்மா என்னிடம் சொன்னார். பேரிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

> சாட்சி அரசு தரப்பு வழக்கை ஆதரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது.

**அ.த.கு.வி.**

கடந்த 08.08.2016ம் தேதி மாலை 5.30 மணியளவில் அனுமந்தன்பட்டி பஜனை கோவில் தெருவில் உள்ள என்னுடைய கடைக்கு முன்னர் எதிரி சதீஸ்குமார் மாரிமுத்துவை அரிவாளால் வெட்டியதாக அதில் மாரிமுத்துவின் கழுத்தின் இடதுபக்கமும், இடது கைவிரலில் ரத்தக்காயங்கள் ஏற்பட்டதாக மாரிமுத்து தடுத்தபோது சதீஸ்குமார் மீண்டும் இடதுகால் மணிக்கட்டிலும், இடது தொடையிலும் வெட்டி ரத்தக்காயங்கள் ஏற்படுத்தினார் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.